அதியமான்
...ஒன்று சேர்...

ATHIYAMAN ACADEMY

2016 முதல் · கோயம்புத்தூர்

TNPSC குரூப் 2 & 2A – 2026
தமிழ் வினாத்தாள் மூல நூல்

ஒவ்வொரு தமிழ் வினாவும் எந்தப் பாடநூல் பக்கத்திலிருந்து வந்தது என்பதை அடையாளம் காட்டும் நூல்

பொதுத் தமிழ் · வினாவாரியான மூல ஆய்வு
தேர்வு நாள் 01.11.2026 · 100 வினாக்கள் · முழு ஆய்வு

100	55+3	42	7
வினாக்கள்	பாடநூலிலிருந்து	வெளியிலிருந்து	வகுப்புகள்

அதியமான் ஆய்வுக் குழுவால் தயாரிக்கப்பட்டது
www.athiyamanteam.com
99943 59181 · 86818 59181

ATHIYAMAN ACADEMY athiyamanteam.com

முழு ஆய்வு – தமிழ் வினாத்தாள் எங்கிருந்து வந்தது

2026 ஆம் ஆண்டு TNPSC குரூப் 2 & 2A பொதுத் தமிழ் வினாத்தாளின் 100 வினாக்களையும் எடுத்து, ஒவ்வொரு வினாவும் எந்தப் பாடநூல், எந்த இயல், எந்தப் பக்கத்திலிருந்து உருவாக்கப்பட்டது என்பதை எங்கள் ஆய்வுக் குழு வினா வினாவாகக் கண்டறிந்தது.

> **முக்கியக் கண்டுபிடிப்பு.** 100 வினாக்களில் **58** வினாக்கள் தமிழ்நாடு அரசுப் பாடநூலில் அடையாளம் காணப்பட்டுள்ளன — இதில் **55** வினாக்கள் நேரடிப் பக்க மேற்கோள், **3** வினாக்கள் தொடர்புடைய கருத்து அடிப்படையிலானவை (நூலில் தனியே குறிக்கப்பட்டுள்ளன). மீதமுள்ள **42** வினாக்கள் பாடநூலுக்கு வெளியே உள்ளன. அதாவது பாடநூலை மட்டும் படித்தவர் இந்தத் தாளில் 42 வினாக்களைச் சந்திக்க முடியாது — பொது அறிவுத் தாளைவிட தமிழ்த் தாள் பாடநூலில் குறைவாகவே நங்கூரமிட்டுள்ளது.

பாடநூல் / வெளி மூலப் பகிர்வு




வகுப்பு வாரியான பகிர்வு – 61 மூல மேற்கோள்கள்



இங்கு எண்ணப்படுவது மேற்கோள்கள், வினாக்கள் அல்ல. 58 பாடநூல் வினாக்களில் **5** வினாக்கள் (3, 18, 25, 76, 97) இரண்டு வகுப்பு நூல்களை மேற்கோள் காட்டுகின்றன; அவை இரு வகுப்புகளிலும் கணக்கிடப்படுகின்றன. **2** வினாக்களுக்கு (19, 67) பாடநூல் பக்கம் உள்ளது, ஆனால் வகுப்புக் குறிப்பு இல்லை. எனவே 58 − 2 + 5 = 61.

8, 9, 10 ஆம் வகுப்புகள் சேர்ந்து **39** மூலங்களை (64%) அளித்துள்ளன — மொத்தப் பாடநூல் மூலங்களில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு. 7 ஆம் மற்றும் 11 ஆம் வகுப்புகள் மிகக் குறைவான பங்களிப்பே தந்துள்ளன. நேரம் குறைவாக இருப்பின் எந்த வகுப்பு நூல்களுக்கு முன்னுரிமை தர வேண்டும் என்பதை இது தெளிவாகக் காட்டுகிறது.

புதிய / பழைய பதிப்பு – 58 பாடநூல் வினாக்கள்



இங்கு ஒவ்வொரு வினாவும் ஒரு முறை மட்டுமே எண்ணப்படுகிறது. புதிய மற்றும் பழைய இரு பதிப்புகளையும் மேற்கோள் காட்டும் வினாக்கள் தனியே காட்டப்பட்டுள்ளன.

> **கவனிக்க.** 16 வினாக்கள் பழைய பதிப்பு நூலை மேற்கோள் காட்டுகின்றன. புதிய பதிப்பை மட்டும் வைத்திருப்பவர் இந்த மூலங்களைக் காண முடியாது. பழைய பதிப்பு நூல்களையும் கைவசம் வைத்திருப்பது தமிழ்த் தாளுக்கு இன்றியமையாதது.

ATHIYAMAN ACADEMY athiyamanteam.com

- **12 ஆம் வகுப்பு புதிய நூல் பக்கம் 44 ஒன்றிலிருந்தே 5 வினாக்கள்** (39, 40, 41, 42, 43) வந்துள்ளன — இந்த வினாத்தாளின் மிக அடர்த்தியான ஒரே பக்கம்.
- **12 ஆம் வகுப்பு கூடுதல் தமிழ் (Advance Tamil)** நூலிலிருந்து 3 வினாக்கள் வந்துள்ளன — பெரும்பாலான தேர்வர்கள் திறந்தே பார்க்காத நூல்.
- 10 ஆம் வகுப்பு ப.50 / ப.90 / ப.8, 9 ஆம் வகுப்பு ப.84 / ப.19, 8 ஆம் வகுப்பு ப.79 / ப.66 / ப.90 — ஒவ்வொன்றும் தலா **2** வினாக்கள் தந்துள்ளன.
- பாடநூலுக்கு வெளியே உள்ள 42 வினாக்களில் பெரும்பாலானவை இலக்கணம், மரபுத்தொடர், நூல்–ஆசிரியர் பொருத்தம் சார்ந்தவை — இவற்றுக்கு முந்தைய ஆண்டு வினாத்தாள் பயிற்சியே சிறந்த தயாரிப்பு.

> **எப்படிப் பயன்படுத்துவது.** முதல் பகுதியில் 58 பாடநூல் வினாக்கள் — ஒவ்வொன்றுக்கும் அசல் வினாவும், அதற்கான பாடநூல் பக்கமும் அருகருகே. இரண்டாம் பகுதியில் 42 வெளி வினாக்கள். உங்கள் நூலில் அந்தப் பக்கத்தைத் திறந்து ஒப்பிட்டுப் படியுங்கள்.

ATHIYAMAN ACADEMY athiyamanteam.com

பகுதி 1 – பாடநூலிலிருந்து வந்த வினாக்கள் (58)

01 வினா எண் 1

விடை D


பிழையற்ற தொடரைத் தேர்க.

(A) இனி செய்யலாம்
(B) மற்றை செல்வம்
(C) இன்றிகொடேன்
(D) தேச பக்தி

பாடநூல் மூலம்

▶ 9th New Book Tamil Pg.No–79 & 113

மூல வினா



பாடநூல் பக்கம்

இனிக் காண்போம் தனிச் சிறப்பு	இனி, தனி ஆகிய சொற்களின்பின் வல்லினம் மிகும்.

வல்லெழுத்துகள் க, ச, த, ப ஆகிய நான்கும் மொழிக்கு முதலில் வரும். இவை நிலைமொழியுடன் புணர்கையில் அவற்றின் மெய்யெழுத்துகள் தோன்றிப் புணரும். இதை வல்லினம் மிகுதல் என்பர். இவ்வாறு

மேற்கண்ட சொற்களில் வல்லினம் மிகும்போது ஒரு பொருளும் மிகாதபோது வேறொரு பொருளும் வருவதை அறியலாம். நாம் பேசும்போதும் எழுதும்போதும் பொருள் மயக்கம் தராத வகையில் மொழியைப் பயன்படுத்துவதற்கு வல்லினம் மிகா இடங்களை அறிவது இன்றியமையாததாகும்.

02 வினா எண் 2

விடை A

தொடர்புடைய கருத்து


எழுத்துப்பிழையுள்ள சொல்லைக் கண்டறிக.

(A) கடைகால்
(B) கத்தரிக்கோல்
(C) ஐந்நூறு
(D) ஆவாரம்பூ

பாடநூல் மூலம்

▶ 9th old Book Tamil Term–2 iyal–1 Pg.No–24

மூல வினா



பாடநூல் பக்கம்

இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.

நூலை + படி = நூலைப்படி

பாலை + குடி = பாலைக்குடி

இரண்டு, மூன்று, நான்கு, ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வல்லினம் மிகும்.

தண்ணீர் + குடம் = தண்ணீர்க்குடம்
மரம் + பெட்டி = மரப்பெட்டி
பூட்டு + சாவி = பூட்டுச்சாவி
விழி + புனல் = விழிப்புனல்.

03 வினா எண் 3

விடை D

வேற்றுமை உருபை ஏற்காது; செயலையும், காலத்தையும் காட்டும் சொல் கண்டறிக.

(A) உரிச்சொல்
(B) இடைச்சொல்
(C) பெயர்ச்சொல்
(D) வினைச்சொல்


பாடநூல் மூலம்

- 6th New Book Tamil Term–3 iyal–1 Pg.No–13
- 12th old Book Advance Tamil

மூல வினா

வேற்றுமை உருபை ஏற்காது; செயலையும், காலத்தையும் காட்டும் சொல் கண்டறிக.
(A) உரிச்சொல்
(B) இடைச்சொல்
(C) பெயர்ச்சொல்
(D) வினைச்சொல்
(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்



வினைச்சொல்

வினை என்னும் சொல்லுக்குச் செயல் என்பது பொருள். செயலைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும்.

(எ.கா.) வா, போ, எழுது, விளையாடு.

தமிழில் சொற்களைப் பெயர், வினை, இடை, உரி என நான்காகப் பிரிப்பர். இவற்றுள் வினைச்சொல் என்பது செயலையும் காலத்தையும் காட்டும்; வேற்றுமை உருபு ஏற்காது (வேற்றுமை உருபுகள் எவை என அறிக).

04 வினா எண் 4

விடை D

"வறக்குமேல்" என்னும் சொல்லிற்கு எதிர்ச்சொல் கண்டறிக.

(A) இயல்பு
(B) குற்றம்
(C) பெய்யாது
(D) பெய்யும்

பாடநூல் மூலம்

- 2024 Edition 6th New Book Tamil Term–1 Last Page–205

மூல வினா

"வறக்குமேல்" என்னும் சொல்லிற்கு எதிர்ச்சொல் கண்டறிக.
(A) இயல்பு
(B) குற்றம்
(C) பெய்யாது
(D) பெய்யும்
(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்



சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

8. வானம் வறண்டால் திருவிழாவும் வழிபாடும்
உலகில் வானவர்க்கும் நிகழ மாட்டா.

05 வினா எண் 5

விடை B


"படிக்கின்ற பையன்" – பெயரெச்ச வகை அறிந்து எழுதுக.

(A) இறந்தகால பெயரெச்சம்
(B) நிகழ்கால பெயரெச்சம்
(C) எதிர்கால பெயரெச்சம்
(D) ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்

பாடநூல் மூலம்

▶ 10th Old Book Tamil Pg.No–50

மூல வினா


"படிக்கின்ற பையன்" – பெயரெச்ச வகை அறிந்து எழுதுக.
(A) இறந்தகால பெயரெச்சம்
(B) நிகழ்கால பெயரெச்சம்
(C) எதிர்கால பெயரெச்சம்
(D) ஈறுகெடாத பெயரெச்சம்
(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்


பெயரெச்சம்

படித்த கயல்விழி. சென்ற கோதை.

படித்த, சென்ற என்னும் முற்றுப்பெறாத எச்சவினைகள் கயல்விழி, கோதை எனப் பெயரைக்கொண்டு முடிந்ததால் அவை பெயரெச்சங்கள் எனப்படும். அஃதாவது, ஓர் எச்சவினை (வந்த, நடந்த) பெயரைக்கொண்டு முடிந்தால், அது பெயரெச்சம் எனப்படும். இப்பெயரெச்சம் காலவகையால் மூவகைப்படும்.

1. இறந்தகாலப் பெயரெச்சம் – படித்த கயல்விழி, சென்ற கோதை
2. நிகழ்காலப் பெயரெச்சம் – படிக்கின்ற கயல்விழி, செல்கின்ற கோதை
3. எதிர்காலப் பெயரெச்சம் – படிக்கும் கயல்விழி, செல்லும் கோதை

இது தெரிநிலைப் பெயரெச்சம், குறிப்புப் பெயரெச்சம் என இருவகைப்படும்.

06 வினா எண் 6

விடை D


"செல்" என்னும் வேர்ச்சொல்லுக்குப் பொருத்தமான வினையாலணையும் பெயர்ச் சொல்லைத் தேர்க.

(A) செல்க
(B) செல்கிறான்
(C) செல்வான்
(D) சென்றவன்


பாடநூல் மூலம்

▶ 10th New Book Tamil Pg.No–18

மூல வினா


"செல்" என்னும் வேர்ச்சொல்லுக்குப் பொருத்தமான வினையாலணையும் பெயர்ச் சொல்லைத் தேர்க.
(A) செல்க
(B) செல்கிறான்
(C) செல்வான்
(D) சென்றவன்
(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்


வினையாலணையும் பெயர்

ஒரு வினைமுற்று பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபு ஏற்றும் ஏற்காமலும் வேறொரு பயனிலையைக் கொண்டு முடிவது வினையாலணையும் பெயர் எனப்படும். அது தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும் மூன்று காலங்களிலும் வரும்.

எ. கா. வந்தவர் அவர்தான்.
பொறுத்தார் பூமியாள்வார்.

07 வினா எண் 7

விடை A

'ஓடு' என்னும் வேர்ச் சொல்லின் வினையெச்சச் சொல்லைக் கண்டறிக.

(A) ஓடி விழுந்தது
(B) ஓடா
(C) ஓடிய
(D) ஓடாது

பாடநூல் மூலம்

▶ 10th Old Book Tamil Pg.No–51

மூல வினா

'ஓடு' என்னும் வேர்ச் சொல்லின் வினையெச்சச் சொல்லைக் கண்டறிக.

(A) ஓடி விழுந்தது
(B) ஓடா
(C) ஓடிய
(D) ஓடாது
(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்



வினையெச்சம்

முற்றுப்பெறாத வினைச்சொற்கள் (எச்சங்கள்) வேறொரு வினைமுற்றைக்கொண்டு முடிந்தால், அது வினையெச்சம் எனப்படும்.

(எ–டு) படித்து வந்தான், பாடக் கேட்டான், ஓடிச் சென்றான், போய்ப் பார்த்தான்.

அஃதாவது, ஓர் எச்சவினை, வினையைக்கொண்டு முடிந்தால், அது வினையெச்சம் எனப்படும். இவ்வினையெச்சம் காலவகையால் மூவகைப்படும்.

08 வினா எண் 8

விடை C

நட – என்ற வேர்ச்சொல்லின் வினைமுற்றைக் கண்டறிக.

(A) நடவாமல்
(B) நடக்கா
(C) நடந்தான்
(D) நடந்து

பாடநூல் மூலம்

▶ 10th Old Book Tamil Pg.No–49

மூல வினா

நட – என்ற வேர்ச்சொல்லின் வினைமுற்றைக் கண்டறிக.

(A) நடவாமல்
(B) நடக்கா
(C) நடந்தான்
(D) நடந்து
(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்



வினைமுற்று

அருளரசு வந்தான். வளவன் நடந்தான்.

இத்தொடர்களில் வந்தான், நடந்தான் என்னும் வினைச்சொற்களின் பொருள் முற்றுப்பெற்று வந்துள்ளன. இவ்வாறு, தன்பொருளில் முற்றுப்பெற்று வந்துள்ள வினைச்சொற்களை வினைமுற்றுகள் என்பர். இது முற்றுவினை எனவும் வழங்கப்படும்.

'வந்தான், நடந்தான்' என்னும் வினைமுற்றுகள் 'ஆன்' என்னும் விகுதிபெற்றுள்ளதால், உயர்திணையையும், ஆண்பாலையும், ஒருமை என்ற எண்ணையும், படர்க்கை இடத்தையும், உணர்த்துகின்றன. 'த்' என்ற இடைநிலை வந்துள்ளதால் (நட + த் (ந்) + த் + ஆன்); (வா (வ) + த் (ந்) + த் + ஆன்) இஃது இறந்த காலத்தையும் உணர்த்துகிறது.

வினைமுற்று எழுவாய்க்குப் பயனிலையாய் அமையும்; முக்காலங்களில் ஒன்றை உணர்த்தும்; திணை, பால், எண், இடங்களைக் காட்டும். இவ்வினைமுற்று தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என இருவகைப்படும்.

09 வினா எண் 12

விடை D

சந்திப் பிழை அறிதல் : பிழையான தொடரைத் தேர்ந்தெடு

(A) தமிழ்ச்சொல்
(B) நேர்க்கோடு
(C) மாற்றுப்பெயர்
(D) வெந்நீர்க் காய்ச்சு

பாடநூல் மூலம்

▶ 9th New Book Tamil Pg.No–113

மூல வினா

சந்திப் பிழை அறிதல் :
பிழையான தொடரைத் தேர்ந்தெடு

(A) தமிழ்ச்சொல்
(B) நேர்க்கோடு
(C) மாற்றுப்பெயர்
(D) வெந்நீர்க் காய்ச்சு
(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்

வினைத்தொகையில் வல்லினம் மிகாது.

10 வினா எண் 13

விடை C

புணரி, ஆர்கலி என்ற சொற்கள் எதனைக் குறிக்கும்?

(A) நிலம்
(B) காற்று
(C) கடல்
(D) வெள்ளம்

பாடநூல் மூலம்

▶ 9th old Book Tamil Term–1 iyal–3 Pg.No–84

மூல வினா

புணரி, ஆர்கலி என்ற சொற்கள் எதனைக் குறிக்கும்?

(A) நிலம்
(B) காற்று
(C) கடல்
(D) வெள்ளம்
(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்

கடலும் மரக்கலங்களும்

ஆழி, ஆர்கலி, முந்நீர், வாரணம், பௌவம், பரவை,புணரி என்பவை கடலைக் குறிக்கும் தமிழ்ச்சொற்கள். இவ்வாறே மரக்கலத்துக்கும் தமிழ்மொழியில் பெயர்கள் பல வழங்குகின்றன. அவை: கப்பல், கலம், கட்டுமரம், நாவாய், படகு, பரிசில், புணை, தோணி, தெப்பம், திமில், அம்பி, வங்கம், மிதவை, பஃறி, ஓடம் என்பன. ஒவ்வொரு பெயரும் ஒவ்வொரு வகையான கலத்தைக் குறிக்கும். இச்சொற்களைக் கொண்டே பண்டைத் தமிழர்களின் கடற்பயணம் பற்றித் தெளிவாக அறியலாம்.

11 வினா எண் 16

விடை B

ஒரு சொல்லிற்கு இணையான வேறுசொல் அறிதல். உபசரிப்பு

(A) இன்முகம்
(B) விருந்தோம்பல்
(C) நகையாடல்
(D) வரவேற்றல்

பாடநூல் மூலம்

▶ 10th New Book Tamil iyal-3 Pg.No-50

மூல வினா

ஒரு சொல்லிற்கு இணையான வேறுசொல் அறிதல். உபசரிப்பு

(A) இன்முகம்
(B) விருந்தோம்பல்
(C) நகையாடல்
(D) வரவேற்றல்
(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்

தம் வீட்டுக்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

அறவுணர்வும் தமிழர் மரபும்

திருவள்ளுவர் இல்லறவியலில் 'விருந்தோம்பலை வலியுறுத்த ஓர் அதிகாரத்தையே' அமைத்திருக்கிறார்; இல்லறம் புரிவது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே என்கிறார்; முகம் வேறுபடாமல் முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்பதை "மோப்பக் குழையும் அனிச்சம்" என்ற குறளில் எடுத்துரைக்கிறார். விருந்தினரைப் போற்றுதல் இல்லறக் கடமையாக இருந்தது.

12 வினா எண் 18

விடை C

இருபொருள் தரும் சொற்களில் தவறான இணையைத் தேர்வு செய்க.

(A) ஆழி – மோதிரம், கடல்
(B) ஆறு – வழி, எண்
(C) தாமரை – மலர், மான்
(D) வேங்கை – புலி, அளி

பாடநூல் மூலம்


- 9th old Book Tamil Pg.No–84
- 6th old Book Tamil Pg.No–8

மூல வினா

இருபொருள் தரும் சொற்களில் தவறான இணையைத் தேர்வு செய்க.

(A) ஆழி – மோதிரம், கடல்
(B) ஆறு – வழி, எண்
(C) தாமரை – மலர், மான்
(D) வேங்கை – புலி, அளி
(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்



கடலும் மரக்கலங்களும்

ஆழி, ஆர்கலி, முந்நீர், வாரணம், பௌவம், பரவை,புணரி என்பவை கடலைக் குறிக்கும் தமிழ்ச்சொற்கள். இவ்வாறே மரக்கலத்துக்கும் தமிழ்மொழியில் பெயர்கள் பல வழங்குகின்றன. அவை: கப்பல், கலம், கட்டுமரம், நாவாய், படகு, பரிசில், புணை, தோணி, தெப்பம், திமில், அம்பி, வங்கம், மிதவை, பஃறி, ஓடம் என்பன. ஒவ்வொரு பெயரும் ஒவ்வொரு வகையான கலத்தைக் குறிக்கும். இச்சொற்களைக் கொண்டே பண்டைத் தமிழர்களின் கடற்பயணம் பற்றித் தெளிவாக அறியலாம்.

ஆறு – ஓர் எண் (6)
ஆறு – இயற்கையாக இருகரைகளுக்கு இடையில் நீர் ஒடும் பரப்பு
ஆறு – வழி
ஆறு – தணி

13 வினா எண் 19

விடை B

துர்க்கை, பகலவன் இளங்கன்று இவற்றைக் குறிக்கும் சொல்.

(A) எற்றி
(B) கொற்றி
(C) கோட்டி
(D) ஏற்றி

பாடநூல் மூலம்

- பாடநூலில் இல்லை

மூல வினா

துர்க்கை, பகலின் இளங்கன்று இவற்றைக் குறிக்கும் சொல்.

(A) எற்றி
(B) கொற்றி
(C) கோட்டி
(D) ஏற்றி
(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்





14 வினா எண் 20

விடை A

பொருளறிந்து பொருத்துக : (a) வனப்பு (b) பிடி (c) மருங்கு (d) வீறு (e) மதுரம் ; 1. இனிமை 2. அழகு 3. பெண் யானை 4. பக்கம் 5. வலிமை

(A) (a)2 (b)3 (c)4 (d)5 (e)1
(B) (a)1 (b)2 (c)3 (d)4 (e)5
(C) (a)3 (b)1 (c)2 (d)4 (e)5
(D) (a)1 (b)3 (c)2 (d)5 (e)4

பாடநூல் மூலம்

▶ 9th New Book Pg.No–240

மூல வினா

பொருளறிந்து பொருத்துக :

(a) வனப்பு	1. இனிமை
(b) பிடி	2. அழகு
(c) மருங்கு	3. பெண் யானை
(d) வீறு	4. பக்கம்
(e) மதுரம்	5. வலிமை

	(a)	(b)	(c)	(d)	(e)
(A)	2	3	4	5	1
(B)	1	2	3	4	5
(C)	3	1	2	4	5
(D)	1	3	2	5	4
(E)	விடை தெரியவில்லை				

பாடநூல் பக்கம்

சொற்பொருள் : அடவி – காடு; தடந்தோள் – வலியதோள்; மணிநகர் – அழகிய நகரம்; மருங்கு – பக்கம்.

வனப்பு- அழகு. அவை அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு.

சொல்லும் பொருளும்

நசை–விருப்பம்; நல்கல் –வழங்குதல்; பிடி–பெண்யானை; வேழம் –ஆண்யானை; யா–ஒரு வகை மரம், பாலை நிலத்தில் வளர்வது; பொளிக்கும் –உரிக்கும்; ஆறு–வழி

15 வினா எண் 21

விடை D

ஒரெழுத்தொரு மொழி எழுத்துகளின் எண்ணிக்கையோடு பொருத்துக : (a) "ம" – வருக்கத்தில் (b) "ந" – வருக்கங்களில் (c) "ச" – வருக்கங்களில் (d) "ய" – வருக்கத்தில் ; 1. ஐந்து 2. ஒன்று 3. ஆறு 4. நான்கு

(A) (a)4 (b)3 (c)1 (d)2
(B) (a)4 (b)1 (c)3 (d)2
(C) (a)3 (b)4 (c)1 (d)2
(D) (a)3 (b)1 (c)4 (d)2

பாடநூல் மூலம்

▶ 8th New Book Tamil Pg.No–14

மூல வினா

ஒரெழுத்தொரு மொழி எழுத்துகளின் எண்ணிக்கையோடு பொருத்துக :

(a) "ம" – வருக்கத்தில்	1. ஐந்து
(b) "ந" – வருக்கங்களில்	2. ஒன்று
(c) "ச" – வருக்கங்களில்	3. ஆறு
(d) "ய" – வருக்கத்தில்	4. நான்கு

	(a)	(b)	(c)	(d)
(A)	4	3	1	2
(B)	4	1	3	2
(C)	3	4	1	2
(D)	3	1	4	2
(E)	விடை தெரியவில்லை			

பாடநூல் பக்கம்

தெரிந்து தெளிவோம் ஒரெழுத்து ஒருமொழிகள்

உயிர் எழுத்து	– ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ	ககர வரிசை	– கா, கூ, கை, கோ
மகர வரிசை	– மா, மீ, மூ, மே, மை, மோ	சகர வரிசை	– சா, சீ, சே, சோ
தகர வரிசை	– தா தீ, தூ, தே, தை	வகர வரிசை	– வா, வீ, வை, வெள
பகர வரிசை	– பா, பூ, பே, பை, போ	யகர வரிசை	– யா
நகர வரிசை	– நா, நீ, நே, நை, நோ	குறில் எழுத்து	– நொ, து

16 வினா எண் 23

விடை A

மயிலின் ஒலி மரபைக் கண்டறிக.

(A) அகவும்
(B) முரலும்
(C) கத்தும்
(D) கனைக்கும்

பாடநூல் மூலம்

▶ 8th Old Book Tamil Term–1 Pg.No–79

மூல வினா

மயிலின் ஒலி மரபைக் கண்டறிக.

(A) அகவும்
(B) முரலும்
(C) கத்தும்
(D) கனைக்கும்
(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்

விலங்கு பறவை இனங்களின் ஒலிமரபு

ஆந்தை அலறும்	குதிரை கனைக்கும்	நரி ஊளையிடும்
கழுதை கத்தும்	குயில் கூவும்	புலி உறுமும்
காக்கை கரையும்	கோழி கொக்கரிக்கும்	மயில் அகவும்
கிளி கொஞ்சும்/பேசும்	சிங்கம் முழங்கும்	யானை பிளிறும்

17 வினா எண் 25

விடை C

உறுதிக் கூற்று : உயர்திணைப் பலர்பாலில் அர், மார், விகுதிகள் வந்தாலும் 'கள்' விகுதி சேர்த்து எழுதுதல் உண்டு. காரணம் : அரசர் என்று எழுதும்போது மரியாதைப் பன்மைக்காக 'கள்' விகுதி வரும்.

(A) உறுதிக் கூற்று சரி, காரணம் தவறு
(B) உறுதிக் கூற்று தவறு, காரணம் சரி
(C) உறுதிக் கூற்று, காரணம் இரண்டும் சரி
(D) உறுதிக் கூற்று, காரணம் இரண்டும் தவறு

பாடநூல் மூலம்

▶ 10th New Book Tamil Pg.No–90
▶ 12th New Book Tamil Pg.No–39

மூல வினா

உறுதிக் கூற்று : உயர்திணைப் பலர்பாலில் அர், மார், விகுதிகள் வந்தாலும் 'கள்' விகுதி சேர்த்து எழுதுதல் உண்டு.
காரணம் : அரசர் என்று எழுதும்போது மரியாதைப் பன்மைக்காக 'கள்' விகுதி வரும்.

(A) உறுதிக் கூற்று சரி, காரணம் தவறு
(B) உறுதிக் கூற்று தவறு, காரணம் சரி
(C) உறுதிக் கூற்று, காரணம் இரண்டும் சரி
(D) உறுதிக் கூற்று, காரணம் இரண்டும் தவறு
(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்

உயர்திணைக்குரிய பால் பகுப்புகள்

வீரன், அண்ணன், மருதன் – ஆண்பால்
மகள், அரசி, தலைவி – பெண்பால்
மக்கள், பெண்கள், ஆடவர் – பலர்பால்

இக்காலத் தமிழில் பலர்பாலை உணர்த்தும் சொல் பன்மைப் பொருளை உணர்த்தாமல் ஒருமைப் பொருளை மட்டுமே உணர்த்துகிறது. பன்மைப் பொருள் உணர்த்துவதற்குக் கள் என்னும் விகுதி உதவுகிறது.

அவர் வந்தார் (ஒருமை)

அவர்கள் வந்தார்கள் (பன்மை)

தமிழில் உயர்திணையில் ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் உரிய பொதுப்பெயர்கள் உண்டு. இப்பெயர்கள் தொடர்களில்

18 வினா எண் 27

விடை C


தொடர் வகையில் மறைந்துள்ள உருபை கண்டுபிடித்துப் பொருத்துக. (a) கண்மை (b) நகைப்பெட்டி (c) அரசன் வாள் (d) கனியிதழ் ; 1. 6–ம் வேற்றுமை உருபு 2. உவம உருபு 3. 4–ம் வேற்றுமை உருபு 4. 2–ம் வேற்றுமை உருபு

(A) (a)1 (b)2 (c)3 (d)4
(B) (a)3 (b)4 (c)2 (d)1
(C) (a)3 (b)4 (c)1 (d)2
(D) (a)1 (b)3 (c)4 (d)2

பாடநூல் மூலம்

▶ 8th old Book Tamil Pg.No–57,58,59

மூல வினா



பாடநூல் பக்கம்



ஆம். சரியாகச் சொன்னாய். 'முருகேசன் செடியை நட்டான்' இத்தொடரில் முருகேசன் என்பது எழுவாய். 'செடி' என்பதும் பெயர்ச் சொல்லே. அஃது 'ஐ' என்னும் உருபை ஏற்றுச் செயப்படுபொருளை உணர்த்துகிறது. இவ்வாறு ஒரு பெயர்ச்சொல்லின் பொருளைச் செயப்படுபொருளாக வேறுபடுத்துவது இரண்டாம் வேற்றுமை எனப்படும். இதனைச் செயப்படுபொருள் வேற்றுமை எனவும் வழங்குவர். இதன் உருபு 'ஐ'.

அஃது ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை ஆகிய அறுவகைப் பொருள்களில் வரும்.

நான்காம் வேற்றுமை உருபு 'கு' தானே, ஐயா.

வரிசையாகக் கேட்கிறாய், மகிழ்ச்சி. இது கொடை, பகை, நட்பு, தகவு, அதுவாதல், பொருட்டு, முறை, எல்லை எனப் பல பொருளில் வரும்.

ஆறாம் வேற்றுமை உருபுகள் அது, ஆது, அ என்பவைதாமே, ஐயா.

சரியாகச் சொன்னாய். அது, ஆது என்பன ஒருமைக்கும், அ என்பது பன்மைக்கும் வரும். இவ்வுருபுகள் கிழமைப் (உரிமை) பொருளில் வரும்.

19 வினா எண் 28

விடை C


சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடர் அமைத்திடுக. தன்கிளை செறாஅமை அன்பு எனப்படுவது

(A) அன்பு தன்கிளை எனப்படுவது செறாஅமை
(B) அன்பு செறாஅமை எனப்படுவது தன்கிளை
(C) அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை
(D) தன்கிளை செறாமை எனப்படுவது அன்பு


பாடநூல் மூலம்

▶ 8th New Book Tamil Pg.No–96

மூல வினா



பாடநூல் பக்கம்



அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை
அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்
செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை
நிறை எனப்படுவது மறை பிறர் அறியாமை
முறை எனப்படுவது கண்ஓடாது உயிர் வெளவல்
பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்*

– நல்லந்துவனார்

20 வினா எண் 37

விடை A

அறிஞர் அண்ணாவின் பேச்சு மடைதிறந்த வெள்ளம் போன்று இருக்கும் – இதில் வரும் உவமைத்தொடருக்கான பொருளைத் தேர்ந்தெடுக்க.

(A) தடையின்றி மிகுதியாய்
(B) தெள்ளத்தெளிவாக
(C) வெளிப்படை தன்மை
(D) எளிதில் புரியும்

பாடநூல் மூலம்

▶ 8th New Book Tamil Pg.No–66

மூல வினா

அறிஞர் அண்ணாவின் பேச்சு மடைதிறந்த வெள்ளம் போன்று இருக்கும் – இதில் வரும் உவமைத்தொடருக்கான பொருளைத் தேர்ந்தெடுக்க.

(A) தடையின்றி மிகுதியாய்
(B) தெள்ளத்தெளிவாக
(C) வெளிப்படை தன்மை
(D) எளிதில் புரியும்
(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்

உவமைத் தொடர்கள்

நாம் பேச்சிலும் எழுத்திலும் கருத்துகளை எளிதாக விளக்குவதற்காகச் சில தொடர்களைப் பயன்படுத்துவோம். அவை உவமைத் தொடர்கள் எனப்படும். ஒவ்வொரு உவமைத் தொடருக்கும் தனிப் பொருள் உண்டு.

(எ.கா) 1. மடை திறந்த வெள்ளம் போல் – தடையின்றி மிகுதியாக.

திருவிழாவைக் காண மடைதிறந்த வெள்ளம் போல மக்கள் வந்தனர்.

2. உள்ளங்கை நெல்லிக்கனி போல – வெளிப்படைத் தன்மை

பாரதியின் பாடல்கள் உள்ளங்கை நெல்லிக்கனி போல அனைவருக்கும் விளங்கும்.

21 வினா எண் 39

விடை C

வேதநாயகம் நகர்மன்றத் தலைவராகப் பணியாற்றிய இடம் எது?

(A) சென்னை
(B) காஞ்சிபுரம்
(C) மாயவரம்
(D) சிதம்பரம்

பாடநூல் மூலம்

▶ 12th New Book Tamil Pg.No–44

மூல வினா

கொடுக்கப்பட்ட பத்தியிலிருந்து கேட்கப்பட்ட வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க. [139 – 143]

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தென்னிந்தியப் பகுதியில் ஏற்பட்ட மிகக்கொடிய பஞ்சத்தைத் தாது வருடப் பஞ்சம் என்று இன்றும் நினைவுகூர்வர். ஒரு கோடி மக்கள் பஞ்சத்தின் பிடியில் சிக்கி இறந்திருக்கலாம் எனப் பதிவுகள் கூறுகின்றன. இதைக் கண்டு மனம் பொறுக்காத தமிழர் ஒருவர் மனமுவந்து தமது சொத்துக்கள் அனைத்தையும் கொடையளித்தார். இதனைப் போற்றும் விதமாகக் கோபால கிருஷ்ண பாரதியார், 'நீயே புருஷ மேரு...' என்ற பாடலை இயற்றி அவரைப் பெருமைப்படுத்தினார். இவர் மொழிபெயர்ப்பாளராகவும், நாவலாசிரியராகவும் பெயர் பெற்றவர். தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்தை இயற்றியவர். மாயவரத்தின் நகர்மன்றத் தலைவராக பணியாற்றிய இவர், ஆங்கிலத்தில் இருந்த நீதிமன்ற தீர்ப்புகளை முதன்முதலில் தமிழில் மொழிபெயர்த்து 'சித்தாந்த சங்கரகம்' என்ற நூலாக வெளியிட்டார். அவர்தான் நீதிபதி மாயூரம் வேதநாயகம்.

வினாக்கள் :

. வேதநாயகம் நகர்மன்றத் தலைவராகப் பணியாற்றிய இடம் எது?


(A) சென்னை
(B) காஞ்சிபுரம்
(C) மாயவரம்
(D) சிதம்பரம்
(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்

மொழியை ஆள்வோம்

சான்றோர் சித்திரம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தென்னிந்தியப் பகுதியில் ஏற்பட்ட மிகக்கொடிய பஞ்சத்தைத் தாது வருடப் பஞ்சம் (Great Famine 1876–1878) என்று, இன்றும் நினைவு கூர்வர். ஒரு கோடி மக்கள் பஞ்சத்தின் பிடியில் சிக்கி இறந்திருக்கலாம் எனப் பதிவுகள் கூறுகின்றன. இதைக் கண்டு மனம் பொறுக்காத தமிழர் ஒருவர் மனமுவந்து தமது சொத்துகள் அனைத்தையும் கொடையளித்தார். இதனைப் போற்றும் விதமாகக் கோபாலகிருஷ்ண பாரதியார், 'நீயே புருஷ மேரு...' என்ற பாடலை இயற்றி அவரைப் பெருமைப்படுத்தினார். அவர்தான், நீதிபதி மாயூரம் வேதநாயகம். இவர், மொழிபெயர்ப்பாளராகவும் நாவலாசிரியராகவும் பெயர் பெற்றவர்; தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்தை இயற்றியவர். மாயவரத்தின் நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றிய இவர், தமது சமகாலத் தமிழறிஞர்களான மகாவித்வான் மீனாட்சி சுந்தரனார், இராமலிங்க வள்ளலார், சுப்பிரமணிய தேசிகர் போன்றோரிடம் நட்புப் பாராட்டி நெருங்கியிருந்தார்; கி.பி. 1805முதல் கி.பி. 1861ஆம் ஆண்டுவரை ஆங்கிலத்தில் இருந்த நீதிமன்றத் தீர்ப்புகளை முதன்முதலில் தமிழில் மொழிபெயர்த்து 'சித்தாந்த சங்கிரகம்' என்ற நூலாக வெளியிட்டார்; மேலும் பெண்மதி மாலை, திருவருள் அந்தாதி, சர்வ சமய சமரசக் கீர்த்தனை, சுகுண சுந்தரி முதலிய நூல்களையும் பல தனிப்பாடல்களையும் இயற்றியுள்ளார். இசையிலும் வீணை வாசிப்பதிலும் வல்லவராகத் திகழ்ந்த இவர், ஆயிரத்திற்கும் மேற்பட்ட கீர்த்தனைகளை இயற்றியிருக்கிறார்; வடமொழி, பிரெஞ்சு, இலத்தீன் ஆகிய மொழிகளைக் கற்றறிந்திருந்தார். இவர், பெண்கல்விக்குக் குரல் கொடுத்த மிக முக்கிய ஆளுமையாக அறியப்படுகிறார். இவருடைய மொழியாட்சிக்குச் சான்றாக, பிரதாப முதலியார் சரித்திரத்திலிருந்து ஒரு பத்தி:


மாயூரம் வேதநாயகம் (1826–1889)

"கல்வி விஷயத்தைப் பற்றி உன் பாலன் சொல்வதைக் கேள்" என்று என் பிதா ஆக்ஞாபித்தார். உடனே என் தாயார் என் முகத்தைப் பார்த்தாள். நான் முன் சொன்னபடி என் பாட்டியாரிடத்திலே கற்றுக்கொண்ட பாடத்தை என் தாயாருக்குச் சொன்னேன். அதைக் கேட்டவுடனே என் தாயாருக்கு முகம் மாறிவிட்டது. பிறகு சற்று நேரம் பொறுத்து, என் தாயார் என்னை நோக்கி, "என்

43

22 வினா எண் 40

விடை A

'நீயே புருஷ மேரு...' என்றப் பாடலை பாடியவர் யார்?

(A) கோபால கிருஷ்ண பாரதியார்
(B) பிரதாப முதலியார்
(C) மாயூரம் வேதநாயகம்
(D) சுத்தானந்த பாரதியார்

பாடநூல் மூலம்

▶ 12th New Book Tamil Pg.No–44


மூல வினா

'நீயே புருஷ மேரு...' என்றப் பாடலை பாடியவர் யார்?
(A) கோபால கிருஷ்ண பாரதியார்
(B) பிரதாப முதலியார்
(C) மாயூரம் வேதநாயகம்
(D) சுத்தானந்த பாரதியார்
(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்

மொழியை ஆள்வோம்

சான்றோர் சித்திரம்



மாயூரம் வேதநாயகம் (1826–1889)

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தென்னிந்தியப் பகுதியில் ஏற்பட்ட மிகக்கொடிய பஞ்சத்தைத் தாது வருடப் பஞ்சம் (Great Famine 1876–1878) என்று, இன்றும் நினைவு கூர்வர். ஒரு கோடி மக்கள் பஞ்சத்தின் பிடியில் சிக்கி இறந்திருக்கலாம் எனப் பதிவுகள் கூறுகின்றன. இதைக் கண்டு மனம் பொறுக்காத தமிழர் ஒருவர் மனமுவந்து தமது சொத்துகள் அனைத்தையும் கொடையளித்தார். இதனைப் போற்றும் விதமாகக் கோபாலகிருஷ்ண பாரதியார், 'நீயே புருஷ மேரு...' என்ற பாடலை இயற்றி அவரைப் பெருமைப்படுத்தினார். அவர்தான், நீதிபதி மாயூரம் வேதநாயகம். இவர், மொழிபெயர்ப்பாளராகவும் நாவலாசிரியராகவும் பெயர் பெற்றவர்; தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்தை இயற்றியவர். மாயவரத்தின் நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றிய இவர், தமது சமகாலத் தமிழறிஞர்களான மகாவித்வான் மீனாட்சி சுந்தரனார், இராமலிங்க வள்ளலார், சுப்பிரமணிய தேசிகர் போன்றோரிடம் நட்புப் பாராட்டி நெருக்கியிருந்தார்; கி.பி. 1805முதல் கி.பி. 1861ஆம் ஆண்டுவரை ஆங்கிலத்தில் இருந்த நீதிமன்றத் தீர்ப்புகளை முதன்முதலில் தமிழில் மொழிபெயர்த்து 'சித்தாந்த சங்கிரகம்' என்ற நூலாக வெளியிட்டார்; மேலும் பெண்மதி மாலை, திருவருள் அந்தாதி, சர்வ சமய சமரசக் கீர்த்தனை, சுகுண சுந்தரி முதலிய நூல்களையும் பல தனிப்பாடல்களையும் இயற்றியுள்ளார். இசையிலும் வீணை வாசிப்பதிலும் வல்லவராகத் திகழ்ந்த இவர், ஆயிரத்திற்கும் மேற்பட்ட கீர்த்தனைகளை இயற்றியிருக்கிறார்; வடமொழி, பிரெஞ்சு, இலத்தீன் ஆகிய மொழிகளைக் கற்றறிந்திருந்தார். இவர், பெண்கல்விக்குக் குரல் கொடுத்த மிக முக்கிய ஆளுமையாக அறியப்படுகிறார். இவருடைய மொழியாட்சிக்குச் சான்றாக, பிரதாப முதலியார் சரித்திரத்திலிருந்து ஒரு பத்தி:

"கல்வி விஷயத்தைப் பற்றி உன் பாலன் சொல்வதைக் கேள்" என்று என் பிதா ஆக்ஞாபித்தார். உடனே என் தாயார் என் முகத்தைப் பார்த்தாள். நான் முன் சொன்னபடி என் பாட்டியாரிடத்திலே கற்றுக்கொண்ட பாடத்தை என் தாயாருக்குச் சொன்னேன். அதைக் கேட்டவுடனே என் தாயாருக்கு முகம் மாறிவிட்டது. பிறகு சற்று நேரம் பொறுத்து, என் தாயார் என்னை நோக்கி, "என்

43

23 வினா எண் 41

விடை A

மாயூரம் வேதநாயகத்தின் தாய்மொழி யாது?

(A) தமிழ்
(B) தெலுங்கு
(C) மலையாளம்
(D) ஆங்கிலம்

பாடநூல் மூலம்

▶ 12th New Book Tamil Pg.No–44

மூல வினா

மாயூரம் வேதநாயகத்தின் தாய்மொழி யாது?

(A) தமிழ்

(B) தெலுங்கு

(C) மலையாளம்


(D) ஆங்கிலம்

(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்

மொழியை ஆள்வோம்

சான்றோர் சித்திரம்



மாயூரம் வேதநாயகம் (1826–1889)

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தென்னிந்தியப் பகுதியில் ஏற்பட்ட மிகக்கொடிய பஞ்சத்தைத் தாது வருடப் பஞ்சம் (Great Famine 1876–1878) என்று, இன்றும் நினைவு கூர்வர். ஒரு கோடி மக்கள் பஞ்சத்தின் பிடியில் சிக்கி இறந்திருக்கலாம் எனப் பதிவுகள் கூறுகின்றன. இதைக் கண்டு மனம் பொறுக்காத தமிழர் ஒருவர் மனமுவந்து தமது சொத்துகள் அனைத்தையும் கொடையளித்தார். இதனைப் போற்றும் விதமாகக் கோபாலகிருஷ்ண பாரதியார், 'நீயே புருஷ மேரு...' என்ற பாடலை இயற்றி அவரைப் பெருமைப்படுத்தினார். அவர்தான், நீதிபதி மாயூரம் வேதநாயகம். இவர், மொழிபெயர்ப்பாளராகவும் நாவலாசிரியராகவும் பெயர் பெற்றவர்; தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்தை இயற்றியவர். மாயவரத்தின் நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றிய இவர், தமது சமகாலத் தமிழறிஞர்களான மகாவித்வான் மீனாட்சி சுந்தரனார், இராமலிங்க வள்ளலார், சுப்பிரமணிய தேசிகர் போன்றோரிடம் நட்புப் பாராட்டி நெருங்கியிருந்தார்; கி.பி. 1805முதல் கி.பி. 1861ஆம் ஆண்டுவரை ஆங்கிலத்தில் இருந்த நீதிமன்றத் தீர்ப்புகளை முதன்முதலில் தமிழில் மொழிபெயர்த்து 'சித்தாந்த சங்கிரகம்' என்ற நூலாக வெளியிட்டார்; மேலும் பெண்மதி மாலை, திருவருள் அந்தாதி, சர்வ சமய சமரசக் கீர்த்தனை, சுகுண சுந்தரி முதலிய நூல்களையும் பல தனிப்பாடல்களையும் இயற்றியுள்ளார். இசையிலும் வீணை வாசிப்பதிலும் வல்லவராகத் திகழ்ந்த இவர், ஆயிரத்திற்கும் மேற்பட்ட கீர்த்தனைகளை இயற்றியிருக்கிறார்; வடமொழி, பிரெஞ்சு, இலத்தீன் ஆகிய மொழிகளைக் கற்றறிந்திருந்தார். இவர், பெண்கல்விக்குக் குரல் கொடுத்த மிக முக்கிய ஆளுமையாக அறியப்படுகிறார். இவருடைய மொழியாட்சிக்குச் சான்றாக, பிரதாப முதலியார் சரித்திரத்திலிருந்து ஒரு பத்தி:

"கல்வி விஷயத்தைப் பற்றி உன் பாலன் சொல்வதைக் கேள்" என்று என் பிதா ஆக்ஞாபித்தார். உடனே என் தாயார் என் முகத்தைப் பார்த்தாள். நான் முன் சொன்னபடி என் பாட்டியாரிடத்திலே கற்றுக்கொண்ட பாடத்தை என் தாயாருக்குச் சொன்னேன். அதைக் கேட்டவுடனே என் தாயாருக்கு முகம் மாறிவிட்டது. பிறகு சற்று நேரம் பொறுத்து, என் தாயார் என்னை நோக்கி, "என்

43

24 வினா எண் 42

விடை B

நீதிமன்ற தீர்ப்புகள் அடங்கிய நூலின் பெயரைக் குறிப்பிடுக.

(A) பிரதாப முதலியார் சரித்திரம்
(B) சித்தாந்த சங்கிரகம்
(C) நீயே புருஷ மேரு
(D) நீதிமன்ற தீர்ப்புகள்

பாடநூல் மூலம்

▶ 12th New Book Tamil Pg.No–44

மூல வினா


நீதிமன்ற தீர்ப்புகள் அடங்கிய நூலின் பெயரைக் குறிப்பிடுக.

(A) பிரதாப முதலியார் சரித்திரம்
(B) சித்தாந்த சங்கிரகம்
(C) நீயே புருஷ மேரு
(D) நீதிமன்ற தீர்ப்புகள்
(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்

மொழியை ஆள்வோம்

சான்றோர் சித்திரம்



மாயூரம் வேதநாயகம் (1826–1889)

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தென்னிந்தியப் பகுதியில் ஏற்பட்ட மிகக்கொடிய பஞ்சத்தைத் தாது வருடப் பஞ்சம் (Great Famine 1876–1878) என்று, இன்றும் நினைவு கூர்வர். ஒரு கோடி மக்கள் பஞ்சத்தின் பிடியில் சிக்கி இறந்திருக்கலாம் எனப் பதிவுகள் கூறுகின்றன. இதைக் கண்டு மனம் பொறுக்காத தமிழர் ஒருவர் மனமுவந்து தமது சொத்துகள் அனைத்தையும் கொடையளித்தார். இதனைப் போற்றும் விதமாகக் கோபாலகிருஷ்ண பாரதியார், 'நீயே புருஷ மேரு...' என்ற பாடலை இயற்றி அவரைப் பெருமைப்படுத்தினார். அவர்தான், நீதிபதி மாயூரம் வேதநாயகம். இவர், மொழிபெயர்ப்பாளராகவும் நாவலாசிரியராகவும் பெயர் பெற்றவர்; தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்தை இயற்றியவர். மாயவரத்தின் நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றிய இவர், தமது சமகாலத் தமிழறிஞர்களான மகாவித்வான் மீனாட்சி சுந்தரனார், இராமலிங்க வள்ளலார், சுப்பிரமணிய தேசிகர் போன்றோரிடம் நட்புப் பாராட்டி நெருக்கியிருந்தார்; கி.பி. 1805முதல் கி.பி. 1861ஆம் ஆண்டுவரை ஆங்கிலத்தில் இருந்த நீதிமன்றத் தீர்ப்புகளை முதன்முதலில் தமிழில் மொழிபெயர்த்து 'சித்தாந்த சங்கிரகம்' என்ற நூலாக வெளியிட்டார்; மேலும் பெண்மதி மாலை, திருவருள் அந்தாதி, சர்வ சமய சமரசக் கீர்த்தனை, சுகுண சுந்தரி முதலிய நூல்களையும் பல தனிப்பாடல்களையும் இயற்றியுள்ளார். இசையிலும் வீணை வாசிப்பதிலும் வல்லவராகத் திகழ்ந்த இவர், ஆயிரத்திற்கும் மேற்பட்ட கீர்த்தனைகளை இயற்றியிருக்கிறார்; வடமொழி, பிரெஞ்சு, இலத்தீன் ஆகிய மொழிகளைக் கற்றறிந்திருந்தார். இவர், பெண்கல்விக்குக் குரல் கொடுத்த மிக முக்கிய ஆளுமையாக அறியப்படுகிறார். இவருடைய மொழியாட்சிக்குச் சான்றாக, பிரதாப முதலியார் சரித்திரத்திலிருந்து ஒரு பத்தி:

"கல்வி விஷயத்தைப் பற்றி உன் பாலன் சொல்வதைக் கேள்" என்று என் பிதா ஆக்ஞாபித்தார். உடனே என் தாயார் என் முகத்தைப் பார்த்தாள். நான் முன் சொன்னபடி என் பாட்டியாரிடத்திலே கற்றுக்கொண்ட பாடத்தை என் தாயாருக்குச் சொன்னேன். அதைக் கேட்டவுடனே என் தாயாருக்கு முகம் மாறிவிட்டது. பிறகு சற்று நேரம் பொறுத்து, என் தாயார் என்னை நோக்கி, "என்

43

25 வினா எண் 43

விடை B

மாயூரம் வேதநாயகம் எந்த நூற்றாண்டில் வாழ்ந்தார்?

(A) 21 ஆம் நூற்றாண்டு
(B) 19 ஆம் நூற்றாண்டு
(C) 20 ஆம் நூற்றாண்டு
(D) 18 ஆம் நூற்றாண்டு

பாடநூல் மூலம்

▶ 12th New Book Tamil Pg.No–44

மூல வினா

மாயூரம் வேதநாயகம் எந்த நூற்றாண்டில் வாழ்ந்தார்?

(A) 21 ஆம் நூற்றாண்டு

(B) 19 ஆம் நூற்றாண்டு

(C) 20 ஆம் நூற்றாண்டு

(D) 18 ஆம் நூற்றாண்டு

(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்

மொழியை ஆள்வோம்

சான்றோர் சித்திரம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தென்னிந்தியப் பகுதியில் ஏற்பட்ட மிகக்கொடிய பஞ்சத்தைத் தாது வருடப் பஞ்சம் (Great Famine 1876–1878) என்று, இன்றும் நினைவு கூர்வர். ஒரு கோடி மக்கள் பஞ்சத்தின் பிடியில் சிக்கி இறந்திருக்கலாம் எனப் பதிவுகள் கூறுகின்றன. இதைக் கண்டு மனம் பொறுக்காத தமிழர் ஒருவர் மனமுவந்து தமது சொத்துகள் அனைத்தையும் கொடையளித்தார். இதனைப் போற்றும் விதமாகக் கோபாலகிருஷ்ண பாரதியார், 'நீயே புருஷ மேரு...' என்ற பாடலை இயற்றி அவரைப் பெருமைப்படுத்தினார். அவர்தான், நீதிபதி மாயூரம் வேதநாயகம். இவர், மொழிபெயர்ப்பாளராகவும் நாவலாசிரியராகவும் பெயர் பெற்றவர்; தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்தை இயற்றியவர். மாயவரத்தின் நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றிய இவர், தமது சமகாலத் தமிழறிஞர்களான மகாவித்வான் மீனாட்சி சுந்தரனார், இராமலிங்க வள்ளலார், சுப்பிரமணிய தேசிகர் போன்றோரிடம் நட்புப் பாராட்டி நெருக்கியிருந்தார்; கி.பி. 1805முதல் கி.பி. 1861ஆம் ஆண்டுவரை ஆங்கிலத்தில் இருந்த நீதிமன்றத் தீர்ப்புகளை முதன்முதலில் தமிழில் மொழிபெயர்த்து 'சித்தாந்த சங்கிரகம்' என்ற நூலாக வெளியிட்டார்; மேலும் பெண்மதி மாலை, திருவருள் அந்தாதி, சர்வ சமய சமரசக் கீர்த்தனை, சுகுண சுந்தரி முதலிய நூல்களையும் பல தனிப்பாடல்களையும் இயற்றியுள்ளார். இசையிலும் வீணை வாசிப்பதிலும் வல்லவராகத் திகழ்ந்த இவர், ஆயிரத்திற்கும் மேற்பட்ட கீர்த்தனைகளை இயற்றியிருக்கிறார்; வடமொழி, பிரெஞ்சு, இலத்தீன் ஆகிய மொழிகளைக் கற்றறிந்திருந்தார். இவர், பெண்கல்விக்குக் குரல் கொடுத்த மிக முக்கிய ஆளுமையாக அறியப்படுகிறார். இவருடைய மொழியாட்சிக்குச் சான்றாக, பிரதாப முதலியார் சரித்திரத்திலிருந்து ஒரு பத்தி:

மாயூரம் வேதநாயகம் (1826–1889)

"கல்வி விஷயத்தைப் பற்றி உன் பாலன் சொல்வதைக் கேள்" என்று என் பிதா ஆக்ஞாபித்தார். உடனே என் தாயார் என் முகத்தைப் பார்த்தாள். நான் முன் சொன்னபடி என் பாட்டியாரிடத்திலே கற்றுக்கொண்ட பாடத்தை என் தாயாருக்குச் சொன்னேன். அதைக் கேட்டவுடனே என் தாயாருக்கு முகம் மாறிவிட்டது. பிறகு சற்று நேரம் பொறுத்து, என் தாயார் என்னை நோக்கி, "என்

43

26 வினா எண் 46

விடை C

வீராயி, மே தினமே வருக, போன்ற படைப்புகளின் ஆசிரியரைக் கண்டறிக.

(A) ஈரோடு தமிழன்பன்
(B) அப்துல் ரகுமான்
(C) தமிழ் ஒளி
(D) மீரா

பாடநூல் மூலம்

▶ 9th New Book Tamil iyal–2 Pg.No–39

மூல வினா

வீராயி, மே தினமே வருக, போன்ற படைப்புகளின் ஆசிரியரைக் கண்டறிக.

(A) ஈரோடு தமிழன்பன்

(B) அப்துல் ரகுமான்

(C) தமிழ் ஒளி

(D) மீரா

(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்

நூல் வெளி

கவிஞர் தமிழ்ஒளி (1924–1965) புதுவையில் பிறந்தவர். பாரதியாரின் வழித்தோன்றலாகவும் பாரதிதாசனின் மாணவராகவும் விளங்கியவர்: மக்களுக்காகப் பல படைப்புகளை உருவாக்கியவர். நிலைபெற்ற சிலை, வீராயி, கவிஞனின் காதல், மே தினமே வருக, கண்ணப்பன் கிளிகள், குருவிப்பட்டி, தமிழர் சமுதாயம், மாதவி காவியம் முதலானவை இவரின் படைப்புகளுள் குறிப்பிடத்தக்கவை. இப்பாடப்பகுதி தமிழ் ஒளியின் கவிதைகள் என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது.

27 வினா எண் 47

விடை A


கூற்று சரியா? தவறா? கூற்று 1. ஜார்ஜ் யுக்லோ போப் பிரான்சு நாட்டைச் சார்ந்தவர் / கூற்று 2. 19 ஆவது வயதில் சமயப் பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் / கூற்று 3. சாந்தோம் பகுதியில் சமயப் பணியாற்றினார் / கூற்று 4. குழந்தைகளுக்குத் தமிழ் இலக்கணத்தைக் கற்பிக்க வினா–விடை முறையில் இரு இலக்கண நூல்களை இயற்றினார்

(A) கூற்று 1, 2, 3, 4 சரி
(B) கூற்று 1, 2, 3 சரி 4 தவறு
(C) கூற்று 1, 2, 4 சரி 3 தவறு
(D) கூற்று 1, 4, 3 சரி 2 தவறு

பாடநூல் மூலம்

▶ 9th old Book Tamil Pg.No–12 & 13

மூல வினா



பாடநூல் பக்கம்



28 வினா எண் 48

விடை D


தேவநேயப் பாவாணரின் சிறப்புப் பெயர் _____

(A) கவி ஞாயிறு
(B) தமிழ் ஞாயிறு
(C) கலை ஞாயிறு
(D) மொழி ஞாயிறு


பாடநூல் மூலம்

▶ 10th New Book Tamil Pg.No–8

மூல வினா



பாடநூல் பக்கம்



29 வினா எண் 49

விடை B

கி.பி. 1554 இல் கார்டிலா என்னும் நூல் முதன் முதலில் தமிழ்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலின் நாடு மற்றும் தலைநகரை கண்டறிந்து எழுதுக.

(A) இத்தாலி – உரோம்
(B) போர்ச்சுகீசு – லிசுபன்
(C) இங்கிலாந்து – வின்செஸ்டர்
(D) ஜெர்மன் – பெர்லின்

பாடநூல் மூலம்

▶ 10th Tamil New Book iyal–1 Pg.No–8

மூல வினா

கி.பி. 1554 இல் கார்டிலா என்னும் நூல் முதன் முதலில் தமிழ்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலின் நாடு மற்றும் தலைநகரை கண்டறிந்து எழுதுக.

(A) இத்தாலி – உரோம்
(B) போர்ச்சுகீசு – லிசுபன்
(C) இங்கிலாந்து – வின்செஸ்டர்
(D) ஜெர்மன் – பெர்லின்
(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்



அலைகடல் தாண்டி, மலை பல கடந்து, எத்திசையிலும் பரவிய தமிழினத்தின்,
தமிழின் புகழ்மணப் பதிவுகளை நுகர்வோமா!...

எத்திசையும் புகழ் மணக்க...

கடல்கடந்து முதலில் அச்சேறிய தமிழ்

போர்ச்சுகீசு நாட்டின் தலைநகர் லிசுபனில், 1554இல் கார்டிலா என்னும் நூல் முதன் முதலாகத் தமிழ்மொழியில்தான் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூல் ரோமன் வரிவடிவில் அச்சிடப்பட்டுள்ளது. ரோமன் எழுத்துருவில் வெளிவந்த இதன் முழுப்பெயர் Carthila de lingoa Tamul e Portugues. இது அன்றைய காலத்திலேயே இரு வண்ணங்களில் (கறுப்பு, சிவப்பு) மாறிமாறி நேர்த்தியாக அச்சிடப்பட்டுள்ளது. இந்திய மொழிகளிலேயே மேலைநாட்டு எழுத்துருவில் முதலில் அச்சேறியது தமிழ்தான்.

செய்தி- ஆறாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர்

30 வினா எண் 50

விடை D

"விதையாமை நாறுவ வித்துஉள; மேதைக்கு உரையாமை செல்லும் உணர்வு". – இச்செய்யுளடிகள் இடம்பெறும் நூலைக் கண்டறிக.

(A) நாலடியார்
(B) நான்மணிக்கடிகை
(C) திருக்குறள்
(D) சிறுபஞ்சமூலம்

பாடநூல் மூலம்

▶ 9th New Book Tamil Pg.No–133

மூல வினா

"விதையாமை நாறுவ வித்துஉள; மேதைக்கு
உரையாமை செல்லும் உணர்வு".
– இச்செய்யுளடிகள் இடம்பெறும் நூலைக் கண்டறிக.

(A) நாலடியார்
(B) நான்மணிக்கடிகை
(C) திருக்குறள்
(D) சிறுபஞ்சமூலம்
(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்

அறிவுடையார் தாமே உணர்வர்

*பூவாது காய்க்கும் மரம் உள; நன்று அறிவார்,
மூவாது மூத்தவர், நூல் வல்லார்; தாவா,
விதையாமை நாறுவ வித்துஉள; மேதைக்கு
உரையாமை செல்லும் உணர்வு*. (பா. எண்: 22)

31 வினா எண் 51

விடை B


சரியான இணையைக் கண்டறிக. 1. ஆசாரக் கோவை – கபிலர் / 2. பழமொழி – முன்றுறை அரையனார் / 3. நான்மணிக்கடிகை – பெருவாயின் முள்ளியார் / 4. இன்னா நாற்பது – விளம்பிநாகனார்

(A) 1 – சரி
(B) 2 – சரி
(C) 3 – சரி
(D) 4 – சரி

பாடநூல் மூலம்

▶ 12th Advance Tamil Pg.No–15

மூல வினா



பாடநூல் பக்கம்



பதினெண்கீழ்க்கணக்கில் உள்ள அறநூல்கள்

நூல்கள்	ஆசிரியர்	நூல்கள்	ஆசிரியர்
திருக்குறள்	திருவள்ளுவர்	ஆசாரக்கோவை	பெருவாயின்முள்ளியார்
நாலடியார்	சமணமுனிவர்கள்	பழமொழி நானூறு	முன்றுறையரையனார்
நான்மணிக்கடிகை	விளம்பிநாகனார்	சிறுபஞ்சமூலம்	காரியாசான்
இன்னா நாற்பது	கபிலர்	ஏலாதி	கணிமேதாவியார்
இனியவை நாற்பது	பூதஞ்சேந்தனார்	முதுமொழிக்காஞ்சி	கூடலூர்கிழார்
திரிகடுகம்	நல்லாதனார்	-----	-----

32 வினா எண் 52

விடை A


பிரித்து எழுதுக. நெட்டிலை

(A) நெடுமை + இலை
(B) நெட்டி + இலை
(C) நெடு + இலை
(D) நெ + இலை


பாடநூல் மூலம்

▶ 11th Tamil Pg.No–49

மூல வினா



பாடநூல் பக்கம்



மை விகுதி கெட்டு நிலைமொழிச் சொல் ஒற்று இரட்டிக்கும்.
நெட்டிலை - நெடுமை + இலை
நெடு + இலை - ஈறுபோதல்
நெட்டு + இலை - தன்னொற்றிரட்டல்
நெட்ட் + இலை - உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்
நெட்டிலை - (ட்+இ) உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

33 வினா எண் 55

விடை C


எதிர்ச்சொல் கூறுக. 'குணக்கு'

(A) வடக்கு
(B) தெற்கு
(C) குடக்கு
(D) கொடுக்கு


பாடநூல் மூலம்

▶ 10th New Book Tamil Pg.No–27

மூல வினா


எதிர்ச்சொல் கூறுக.
'குணக்கு'
(A) வடக்கு
(B) தெற்கு
(C) குடக்கு
(D) கொடுக்கு
(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்


கிழக்கு என்பதற்குக் குணக்கு என்னும் பெயருமுண்டு. கிழக்கிலிருந்து வீசும்போது நான் கொண்டல் எனப்படுகிறேன். கொண்டலாக நான் குளிர்ச்சி தருகிறேன்; இன்பத்தைத் தருகிறேன்; மழையைத் தருகிறேன்; கடல் பகுதிக்கு மேலுள்ள மழைமேகங்களைச் சுமந்து வருவதால் மழைக்காற்று எனப்படுகிறேன்.

மேற்கு என்பதற்குக் குடக்கு என்னும் பெயருமுண்டு. மேற்கிலிருந்து வீசும்போது நான் கோடை எனப்படுகிறேன்; மேற்கிலிருந்து அதிக வலிமையோடு வீசுகிறேன்; வறண்ட நிலப்பகுதியில் இருந்து வீசுவதால் வெப்பக்காற்றாகிறேன்.

34 வினா எண் 56

விடை C


பொருத்துக : (a) படமாடக் கோயில் (b) நடமாடக் கோயில் (c) கரடம் (d) தீர்ந்த ; 1. மதம் 2. நீங்கிய 3. இறைவன் 4. மக்கள்

(A) (a)4 (b)3 (c)1 (d)2
(B) (a)4 (b)1 (c)2 (d)3
(C) (a)3 (b)4 (c)1 (d)2
(D) (a)3 (b)4 (c)2 (d)1

பாடநூல் மூலம்

▶ 8th New Book Tamil iyal–8 Pg.No–168


மூல வினா


பொருத்துக :
(a) படமாடக் கோயில் — 1. மதம்
(b) நடமாடக் கோயில் — 2. நீங்கிய
(c) கரடம் — 3. இறைவன்
(d) தீர்ந்த — 4. மக்கள்

	(a)	(b)	(c)	(d)
(A)	4	3	1	2
(B)	4	1	2	3
(C)	3	4	1	2
(D)	3	4	2	1

(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்


படமாடக் கோயில் பகவற்குஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்குஅங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்குஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்குஅது ஆமே*
– திருமூலர்

சொல்லும் பொருளும்

நமன் – எமன் நாணாமே – கூசாமல்
சித்தம் – உள்ளம் உய்ம்மின் – ஈடேறுங்கள்
நம்பர் – அடியார் ஈயில் – வழங்கினால்
படமாடக்கோயில் – படங்கள் அமைந்த மாடங்களையுடைய கோயில்

பாடலின் பொருள்

மனிதர் அனைவரும் ஒரே இனத்தினர். உலகைக் காக்கும் இறைவனும் ஒருவனே. இக்கருத்துகளை நன்றாக மனத்தில் நிறுத்துபவர்களுக்கு எமனைப் பற்றிய அச்சம் தேவை இல்லை. கூசாமல் செல்லவேண்டிய நல்வழி இதைவிட வேறு இல்லை. உலகத்து மக்களின் உள்ளத்தில் நிலைபெற்று வாழவேண்டுமாயின் இவற்றை நினைத்து ஈடேறுங்கள்.

படங்கள் அமைந்த மாடங்களையுடைய கோயிலில் வீற்றிருக்கும் இறைவனுக்கு ஒருபொருளைக் காணிக்கையாகச் செலுத்தினால் அது நடமாடும் கோயிலாகிய உடம்பையுடைய அடியார்களுக்குச் சேராது. அடியார்களாகிய மக்களுக்குக் கொடுப்பது கோயிலில் இருக்கும் இறைவனுக்கும் சேரும்.

168

35 வினா எண் 59

விடை A


உறுதிக் கூற்று : 'நீ' என்பது ஒருமைக்குரியது. காரணம் : இரு திணைக்கும் பொதுவாய் நின்றது.

(A) உறுதிக் கூற்று சரி காரணம் தவறு
(B) உறுதிக் கூற்று தவறு காரணம் சரி
(C) இரண்டும் சரி
(D) இரண்டும் தவறு


பாடநூல் மூலம்

▶ 10th New Book Tamil Pg.No–90

மூல வினா


உறுதிக் கூற்று : நீ என்பது ஒருமைக்குரியது.
காரணம் : இரு திணைக்கும் பொதுவாய் நின்றது.
(A) உறுதிக் கூற்று சரி காரணம் தவறு
(B) உறுதிக் கூற்று தவறு காரணம் சரி
(C) இரண்டும் சரி
(D) இரண்டும் தவறு
(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்


ஐம்பால்

பால் என்பது திணையின் உட்பிரிவு ஆகும் (பால்–பகுப்பு, பிரிவு). இஃது ஐந்து வகைப்படும்.

உயர்திணை ஆண்பால், பெண்பால், பலர்பால் என மூன்று பிரிவுகளை உடையது. அஃறிணை ஒன்றன்பால், பலவின்பால் என இரு பிரிவுகளை உடையது.

உயர்திணைக்குரிய பால் பகுப்புகள்

வீரன், அண்ணன், மருதன் – ஆண்பால்
மகள், அரசி, தலைவி – பெண்பால்
மக்கள், பெண்கள், ஆடவர் – பலர்பால்

முன்னிலை	முன்னிலைப் பெயர்கள்	நீ, நீர், நீவிர், நீங்கள்
	முன்னிலை வினைகள்	நடந்தாய், வந்தீர், சென்றீர்கள் ...

36 வினா எண் 60

விடை D


அவன், அவள், அது – என்னும் சொற்கள் எவ்வகைப் பெயரைச் சார்ந்தது?

(A) கிளைப் பெயர்
(B) முறைப்பெயர்
(C) தொழிற்பெயர்
(D) சுட்டுப்பெயர்

பாடநூல் மூலம்

▶ 6th New Book Tamil Term–2 Pg.No–64

மூல வினா


அவன், அவள், அது – என்னும் சொற்கள் எவ்வகைப் பெயரைச் சார்ந்தது?
(A) கிளை நுதற்பெயர்
(B) முறைப்பெயர்
(C) தொழிற்பெயர்
(B) சுட்டுப்பெயர்
(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்


சுட்டு எழுத்துகள்

K5Q1SH

அவன், இவள், அங்கு, இங்கு, அந்த, இந்த ஆகிய சொற்களைக் கவனியுங்கள். அவை ஒன்றைச் சுட்டிக் காட்டுகின்றன. இவ்வாறு சுட்டிக்காட்டுவதற்கு அச்சொற்களின் முதலில் அமைந்துள்ள அ, இ ஆகிய எழுத்துகளே காரணம் ஆகும்.

இவ்வாறு ஒன்றைச் சுட்டிக் காட்ட வரும் எழுத்துகளுக்குச் சுட்டு எழுத்துகள் என்று பெயர்.

அ, இ, உ ஆகிய மூன்று எழுத்துகளும் சுட்டு எழுத்துகள் ஆகும். ஆனால், இன்று 'உ' என்னும் எழுத்தைச் சுட்டாகப் பயன்படுத்துவது இல்லை.

அகச்சுட்டு

இவன், அவன், இது, அது - இச்சொற்களில் உள்ள சுட்டு எழுத்துகளை நீக்கினால் பிற எழுத்துகள் பொருள் தருவதில்லை. இவ்வாறு, சுட்டு எழுத்துகள் சொல்லின் உள்ளேயே (அகத்தே) இருந்து சுட்டுப்பொருளைத் தருவது அகச்சுட்டு எனப்படும்.

37 வினா எண் 61

விடை C


கூற்று : ஆறு வல்லின மெய் எழுத்துகளுக்கும் ஆறு மெல்லின எழுத்துகளும் இன எழுத்துகள் ஆகும். காரணம் : சொற்களில் வல்லின மெய் எழுத்தை அடுத்துப் பெரும்பாலும் அதன் இனமாகிய மெல்லின எழுத்து வரும்.

(A) கூற்று சரி, காரணம் தவறு
(B) கூற்று தவறு, காரணம் சரி
(C) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி
(D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு

பாடநூல் மூலம்


▶ 6th New Book Tamil Pg.No–15

மூல வினா



கூற்று : ஆறு வல்லின மெய் எழுத்துகளுக்கும் ஆறு மெல்லின எழுத்துகளும் இன எழுத்துகள் ஆகும்.
காரணம் : சொற்களில் வல்லின மெய் எழுத்தை அடுத்துப் பெரும்பாலும் அதன் இனமாகிய மெல்லின எழுத்து வரும்.
(A) கூற்று சரி, காரணம் தவறு
(B) கூற்று தவறு, காரணம் சரி
(C) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி
(D) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு
(E) விடை தெரியவில்லை
115

பாடநூல் பக்கம்



சில எழுத்துகளுக்கு இடையே ஒலிக்கும் முயற்சி, பிறக்கும் இடம் ஆகியவற்றில் ஒற்றுமை உண்டு. இவ்வாறு ஒற்றுமை உள்ள எழுத்துகள் இன எழுத்துகள் எனப்படும். ஆறு வல்லின மெய் எழுத்துகளுக்கும் ஆறு மெல்லின எழுத்துகளும் இன எழுத்துகள் ஆகும். சொற்களில் மெல்லின மெய் எழுத்தை அடுத்துப் பெரும்பாலும் அதன் இனமாகிய வல்லின எழுத்து வரும்.

38 வினா எண் 62

விடை C


சந்திப்பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(A) அடுக்குத் தொடரில் உள்ள சொற்களை தனி தனியே பிரித்துப் பார்த்தாலும் அவற்றுக்கு பொருள் உண்டு.
(B) அடுக்கு தொடரில் உள்ள சொற்களைத் தனித் தனியே பிரித்துப் பார்த்தாலும் அவற்றுக்கும் பொருள் உண்டு.
(C) அடுக்குத் தொடரில் உள்ள சொற்களைத் தனித்தனியே பிரித்துப் பார்த்தாலும் அவற்றுக்குப் பொருள் உண்டு.
(D) அடுக்கு தொடரில் உள்ள சொற்களை தனித்தனியே பிரித்துப் பார்த்தாலும் அவற்றுக்குப் பொருள் உண்டு.

பாடநூல் மூலம்

▶ 10th old Book Pg.No–81

மூல வினா



சந்திப்பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
(A) அடுக்குத் தொடரில் உள்ள சொற்களைத் தனி தனியே பிரித்துப் பார்த்தாலும் அவற்றுக்கு பொருள் உண்டு.
(B) அடுக்கு தொடரில் உள்ள சொற்களைத் தனித் தனியே பிரித்துப் பார்த்தாலும் அவற்றுக்கும் பொருள் உண்டு.
(C) அடுக்குத் தொடரில் உள்ள சொற்களைத் தனித்தனியே பிரித்துப் பார்த்தாலும் அவற்றுக்குப் பொருள் உண்டு.
(D) அடுக்கு தொடரில் உள்ள சொற்களை தனித்தனியே பிரித்துப் பார்த்தாலும் அவற்றுக்குப் பொருள் உண்டு.
(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்



அடுக்குத்தொடருக்கும் இரட்டைக்கிளவிக்கும் உள்ள வேறுபாடு

அடுக்குத்தொடர்	இரட்டைக்கிளவி
1. சொற்கள் தனித்தனியே நிற்கும்.	1. சொற்கள் ஒன்றுபட்டு நிற்கும்.
2. பிரித்தால் பொருள் தரும்.	2. பிரித்தால் பொருள் தராது.
3. இரண்டு, மூன்று, நான்கு முறை அடுக்கி வரும்.	3. இரட்டித்தே வரும்.
4. விரைவு, அச்சம், வெகுளி, மகிழ்ச்சி	4. இசை, குறிப்பு, பண்பு பற்றி வரும்.

39 வினா எண் 67

விடை B


எண்ணிடைப்படக் கிடந்ததா _____ படுமோ.

(A) நினைக்கவும்
(B) எண்ணவும்
(C) செப்பவும்
(D) பகிரவும்


பாடநூல் மூலம்

▶ பாடநூலில் இல்லை

மூல வினா



பாடநூல் பக்கம்



40 வினா எண் 69

விடை B


அகரவரிசைப்படி சொற்களைச் சீர்செய்தல் :

(A) மைவரை உலகம், தீம்புனல் உலகம், பெருமணல் உலகம், தெய்வம், புள், காடுறை உலகம்
(B) காடுறை உலகம், தீம்புனல் உலகம், தெய்வம், புள், பெருமணல் உலகம், மைவரை உலகம்
(C) காடுறை உலகம், தெய்வம், தீம்புனல் உலகம், பெருமணல் உலகம், புள், மைவரை உலகம்
